மாலை முரசு

பக்கங்கள் 12

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆடி 29 திங்கட்கிழமை 14.08.2023 அதிர்வு 14

## தவறாக அடையாளம் காணப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞன்



நீர்கொழும்பு பிட்டிப்பன மீன் சந்தைக்கு அருகில் நிறுத்தப்படும் வாகனங்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கும் இளைஞன் 04▶

# தமிழரின் தலை பற்றிப் பேசும் மேர்வினுக்கு தலையில் சுகமில்லை என்பது நாடறிந்ததே!



### - மனோ தக்க பதிலடி

"தமிழரின் தலையைக் கொய்து வருவேன் எனக் கொக்கரிக்கும் மேர்வின் சில்வாவுக்குத் தலையில் சுகமில்லை என்பது நாடறிந்த சங்கதி. கூடவே ராஜபக்ஷ குடும்பத்தைத் திருடர்கள், 03▶



**சமஷ்டி அடிப்படையில்தான் தீர்வு சாத்தியம்; ஆயினும்**

# மாகாணத் தேர்தலுடன் முழுமையாக 13 அமுல்!

## அதனை வலியுறுத்தி சம்பந்தன் ஜனாதிபதிக்கு இன்று கடிதம்





**கொழும்பு,ஓகஸ்ட் 14**

சமஷ்டிக் கட்டமைப்பிலேயே அர்த்தமுள்ள எந்தத் தீர்வும் சாத்தியம் என்ற நிலைப்பாட்டில் வேறு சமரசம் அல்லது விட்டுக் கொடுப்புச் செய்து கொள்ளாமல் -

அரசமைப்பில் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் விரைவாக நடைமுறைப்படுத்தவும் -

நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்ட மாகாணசபைத் தேர்தலை நடத்தவும் - 04▶

## செஞ்சோலை படுகொலை நினைவேந்தல் வல்வையில்



செஞ்சோலையில் இலங்கை விமானப்படையின் குண்டு வீச்சில் படுகொலை செய்யப்பட்ட 63 பாடசாலை மாணவிகளின் 17 ஆவது ஆண்டு நினைவு நாள் இன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. 04▶


## யாழ். பல்கலையிலும் இன்று செஞ்சோலை நினைவேந்தல்



(பிரபாகரன் டிலக்சன்)

செஞ்சோலைப் படுகொலையின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல்கள் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் இடம்பெற்றன. 04▶

## ஓட்டோ ஓட்டத்தை மோ.சைக்கிளில் காணொலி எடுத்தவர் விபத்தில் சாவு



ஓட்டோ ஓட்டப்பந்தயத்தை மோட்டார் சைக்கிளில் பயணித்தபடி காணொலிப் பதிவு செய்து கொண்டிருந்த இரு இளைஞர்கள் 04▶

## இராணுவ முகாமை அகற்றாதீர்! கற்கோவளத்தில் ஆர்ப்பாட்டம்



யாழ்ப்பாணம் – பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் உள்ள இராணுவ முகாமை அகற்ற வேண்டாம் 04▶

## மனைவியின் கண் முன் கணவனை வெட்டிக் கொலை செய்த கும்பல்!

**வெல்லம்பிட்டியவில் நடந்த கொடூரம்**

கொழும்பு, வெல்லம்பிட்டிய பிரதேசத்தில் குடும்பஸ்தரொருவர் நேற்று வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டோச் சாரதியான இரண்டு பிள்ளைகளின் தந்தையே (வயது 42) சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். 04▶

## பம்பலப்பிட்டியில் லொறியுடன் மோதிக் கவிழ்ந்த பயணிகள் பஸ்

### இரு பெண்கள் உட்பட ஐவர் காயம்



கொழும்பு பம்பலப்பிட்டி டூப்ளிகேஷன் வீதியில் இன்று அதிகாலை இடம்பெற்ற பஸ் விபத்தில் 7 பேர் காயமடைந்துள்ளனர்.

கொழும்பில் இருந்து கதிர்காமம் நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளானதாக 04▶

# இரகசியமாக வெளிநாடு சென்றுள்ள வைத்தியர்கள் கறுப்புப் பட்டியலில்!

## சுகாதார அமைச்சு தகவல் வெளியீடு



சுகாதார அமைச்சுக்கு அறிவிக்காமல் இரகசியமாக வெளிநாடுகளுக்குச் சென்ற வைத்தியர்களின் பெயர்கள் கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

அவர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதியை இரத்து செய்யுமாறு வைத்திய சபை கோரிய போதிலும் இதுவரையில் அவ்வாறு செய்யப்படவில்லை எனவும் சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

கடந்த ஒன்றரை வருடங்களில் விசேட பயிற்சி பெற்று வெளிநாடுகளில் இருந்து இலங்கை திரும்பிய சுமார் 120 வைத்தியர்கள் சேவை ஒப்பந்தங்களை மீறி சட்டவிரோதமான முறையில் மீண்டும் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, குறித்த வைத்தியர்கள் தொடர்பில் எதிர்காலத்தில் சில விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று சுகாதார அமைச்சின் பணிப்பாளர் வைத்தியர் பிரியந்த அத்தபத்து தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சுக்கு தெரிவிக்காமல் வெளிநாடு செல்லும் வைத்தியர்களிடம் இருந்து 15 மில்லியன் ரூபா நஷ்ட ஈடாக அறவிடத் தீர்மானிக்கப்பட்ட போதிலும் இதுவரை அந்தத் தொகையை அறவிடுவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுக்கவில்லை. அதற்குப் பதிலாக 2 மில்லியனை மாத்திரமே வசூலிக்கும் பணியை மேற்கொண்டு வருகிறது என்றும் அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பில் வெளிநாட்டுக்கு அனுப்புவதாக மோசடி செய்தவர் ஒருவர் பொலிஸாரால் கைது



மட்டக்களப்பில் வெளிநாட்டுக்கு வேலை வாய்ப்புக்கு அனுப்புவதாக ஒருவரிடம் 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் 22 பேரிடம் சுமார் ஒரு கோடி ரூபாய் பணமோசடி செய்த போலி முகவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டுக்கு வேலை வாய்ப்பு அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அமிர்தகழி பிரதேசத்திலுள்ள போலி முகவர் ஒருவரின் வீட்டுக்கு நேற்று (13) ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் இருந்து சென்ற வேலைவாய்ப்பு பணியகத்தினர் குறித்த நபரைக் கைது செய்துள்ளனர் என்று மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு வேலைவாய்ப்பு பணியகத்தில், மட்டக்களப்பு – அமிர்தகழி பிரதேசத்தைச் சேர்ந்த போலி முகவரிடம் வெளிநாட்டுவேலைவாய்ப்புக் காக தலா ஒருவர் 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை வழங்கிய நிலையில், அவர் வெளிநாட்டுக்குஅனுப்பாதுஏமாற்றி வந்த காரணத்தால் போலி முகவருக்கு எதிராக இருவர் முறைப்பாடு செய்திருந்தனர்.

இது தொடர்பாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகள் தொடர் விசாரணையில் குறித்த நபர் தலா 4 லட்சம் ரூபா வீதம் 22 பேரிடம் பணமோசடியில் ஈடுபட்டதைக் கண்டறிந்தனர்.

இதனை தொடர்ந்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகள் மட்டக்களப்பு தலைமைப் பொலிஸாரின் உதவியுடன் குறித்த போலி முகவரின் வீட்டை முற்றுகையிட்டு கைது செய்து மட்டு. தலைமையக பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். விசாரணையின் பின்னர் அவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# ஊடக தொகுப்பாளர் மடுவில் திடீர் மரணம்



மன்னார் மறைமாவட்டத்தின் மருதமடு அன்னையின் ஆவணி மாதத்தின் பெருவிழாவை நேரலையாக ஒளி-ப்பரப்பும் மன்னார் கத்தோலிக்க ஊடக தொகுப்பாளர் திடீரென மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் ஞாயிற்றுக் கிழமை இரவு மருதமடு அன்னையின் ஆலயப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

மன்னார் மருதமடு அன்னையின் வருடாந்த ஆவணி பெருவிழா கடந்த 06.08.2023 அன்று ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இப்பெருவிழா நாளை செவ்வாய்கிழமை காலை பெருவிழாத் திருப்பலியுடன் நிறைவுபெறுகின்றது.

இப்பெருவிழா கத்தோலிக்க நிகழ்வுகளை நேரலையாகத் தொகுத்து அனுப்பும் நபரான மன்னார் நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள புதுக் கமத்தைச் சேர்ந்த ஜெகநாதன் டிரோன் (வயது 28) என்ற நபரே திடீரென மரணமடைந்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை இரவு எட்டாம் நாள் நவநாள் ஒளிப் பரப்பு நிகழ்வுகளை முடித்து விட்டு மடுவில் தனது நண்பர்களுடன் இரவு 11 மணியளவில் உரையாடிக் கொண்டிருந்தபோதே இவர் திடீரென மரணித்துள்ளார் என ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவரின் சடலம் தற்பொழுது மடுவிலிருந்து மன்னார் பொது வைத்தியசாலைக்கு உடற்கூற்று பரிசோதனைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்துள்ளது.






# செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று

முல்லைத்தீவு வள்ளிபுனம் செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் 2006ஆம் ஆண்டு இலங்கை வான்படையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த பாடசாலை மாணவர்களின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று இடம்பெற்றது.

வள்ளிபுனம் இடைக்கட்டு பகுதியில் உள்ள செஞ்சோலை வளாகத்தில் விமானத்தாக்குதல் இடம்பெற்ற நேரத்தில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

இந்தப் பகுதியில் உயிரிழந்த உறவுகளுக்கு சமூக செயற்பாட்டாளர் தம்பையா யோகேஸ்வரன் தலைமையில் சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்டவர்களும் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

செஞ்சோலைக் குண்டுத் தாக்குதல் 2006 ஒகஸ்ட் 14 அன்று இலங்கை வான்படையினரால் நடத்தப்பட்டது. இதன் போது 16 முதல் 18 வயது வரையான 53 பாடசாலை மாணவர்களும் 4 பணியாளர்களும் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### தமிழரின் தலை...

தரகுப் பணம் பெற்றவர்கள் என்கிறார். அந்தக் குடும்பத்துடனேயே மேர்வின் சில்வா குடும்பம் நடத்தினார் என்பதும் நாடறிந்த சங்கதி. ஒருவேளை அத்தகைய திருட்டுத் தரகுப் பணம் பெரும் பிரச்சினையால் ராஜபக்ஷர்களுடன் நடத்திய குடும்பம் பிரிந்ததோ என்ற கேள்வியும் எப்போதும் இந்நாட்டு மக்கள் மனங்களில் இருக்கும் சங்கதி.”

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

”எல்லாவற்றையும் மிஞ்சிய உலக மகா கேலிக்கூத்து என்னனெவென்றால் உலகத்துக்கு அஹிம்சையைப் போதித்த போதிசத்துவர் பெயரில் இவர் தமிழர்களின் தலையை வெட்டுவாராம். இவரைப் போன்றவர்களிடமிருந்து பௌத்தைப் போதிசத்துவர்தான் மீண்டும் பிறந்து வந்து காப்பாற்ற வேண்டும்” என்றும் மனோ எம்.பி. குறிப்பிட்டார்.

இது பற்றி அவர் மேலும் கூறியதாவது:–

”முன்னையை ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில், ஊடகவியலாளர்களின் கால்களை உடைப்பேன் என்றும் இந்த மேர்வின் சில்வா சொன்னார். அப்புறம் அரச ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்குச் சென்று தன் தலையையே உடைத்துக்கொண்டு வந்தார். பின்னர் தேர்தலில் போட்டியிட்டு சிங்கள மக்களாலேயே அரசியலில் இருந்து விரட்டப்பட்டார்.

நாட்டில் விகாரைகளையோ, கோயில்களையோ, பள்ளிகளையோ, தேவாலயங்களையோ கட்டுவிப்பதில், பூஜைகளைச் செய்வதில் இடைஞ்சல்கள் ஏற்பட்டால், அதைச் சட்டப்படி அணுக வேண்டும். அந்தச் சட்டமும் அனைவருக்கும் பொதுவாக இருக்க வேண்டும்.

தமிழர் தலைகளைக் கொய்து வருவேன் என்ற இப்படி தலை வெட்டும் காலம் எல்லாம் இப்போது மலையேறி விட்டது. இவரைப் பாரதூரமானவராக எடுக்கத் தேவையில்லை. ஆனால், இவரது கருத்து பாரதூரமானது. நாட்டில் இன, மத குரோதத்தை உருவாக்கும் கருத்து. இவருக்கு எதிராகச் சட்டம் பாய வேண்டும். அரசில் இருக்கும் தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் இது பற்றி தங்கள் தலைவர்களான மஹிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் புகார் செய்ய வேண்டும்.” – என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## மாகாணத் தேர்தலுடன்...

நாம் விவரித்துள்ளபடி, தமிழ் மக்களின் அபிலாஷைகளின் அடிப்படையிலும் மற்றும் தொடர்ந்து வந்த அரசுகளினால் தீர்வுக்காக வழங்கப்பட்ட பல்வேறு உறுதிமொழிகளுக்கு இணங்கவும் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நடவடிக்கையை விரைந்து முடிக்கவும் ஜனாதிபதியாகிய தங்களைக் கோருகின்றோம்.

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார்.

13 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் நிலைப்பாட்டை அறியத் தருமாறு ஜனாதிபதி கோரியிருந்தார். அதற்கான காலக் கெடு நாளை முடிவடைய இருக்கையில் சம்பந்தன் தமது ஐந்து பக்கக் கடிதத்தை இன்று அனுப்பி வைத்தார்.

அதில் –

சுதந்திரம் பெற்ற காலம் முதல் – குறிப்பாக 1956 முதல் – தமிழர்கள் சமஷ்டி அடிப்படையான தீர்வே தங்கள் அபிலாஷை என்பதை எல்லாத் தேர்தல்களிலும் மாறாமல் வலியுறுத்தி வந்திருக்கிறார்கள் என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இடையில் அவர்கள் தனிநாட்டு கோரிக்கையையும் கூட வலியுறுத்தினர் என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அர்த்தமுள்ள எந்தத் தீர்வும் சமஷ்டி அடிப்படையில் அமைய வேண்டும் என்பது இந்தக் கடிதத்தில் விவரிக்கப்பட்டுள்ளது

தமிழரின் தேசிய இனப் பிரச்சினை மற்றும் அவர்களின் நியாயமான அபிலாசைகள் தொடர்பில் கடந்து வந்த ஒவ்வொரு அரசுகளும் அளித்த வாக்குறுதிகள் மற்றும் முயற்சிகள் இந்த கடிதத்தில் விவரிக்கப்பட்டுள்ளன.

1983 முதல் இந்த விடயத்தில் இந்தியா வழங்கி வரும் பங்களிப்பும் விவரிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் அடிப்படையில், தமிழ் மக்களின் அபிலாசைகளின் உட்கிடைகளைப் புரிந்து கொண்டு, அவற்றுக்கு இணங்கவும், பல்வேறு அரசுகள் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் காலத்துக்கு காலம் வழங்கி வந்த உறுதிமொழிகளைக் கவனத்தில் எடுத்தும், தமிழரின் தேசிய இன்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நடவடிக்கையை விரைந்து முடிக்குமாறு சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

## ஓட்டோ ஓட்டத்தை...

மின்கம்பத்தில் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார். மற்றைய இளைஞர் படுகாயமடைந்துள்ளார் எனப் பாணந்துறை தெற்குப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் பாணந்துறை நல்லுருவ மொரவின்ன பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய ஜயவீரலியனகே தேஷான் பெரேரா எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறையில் இருந்து பாணந்துறை நோக்கி இடம்பெற்ற ஓட்டோப் போட்டியை மோட்டார் சைக்கிள்களில் காணொலி எடுத்துக் கொண்டு மற்றுமொரு இளைஞர் குழு வந்துள்ளது.

இதன்போது நல்லுருவ பகுதியில் மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி மின்கம்பத்துடன் மோதியதில் பலத்த காயமடைந்த இரு இளைஞர்களும் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அந்த இளைஞர்களில் ஒருவர் பலத்த காயங்களினால் உயிரிழந்தார்.

## மனைவியின்...

ஓட்டோ ம்வில் கூரிய ஆயுதங்களுடன் வந்து இறங்கிய நால்வர் கொண்ட கும்பல், வீட்டுக்குள் புகுந்து குடும்பஸ்தரை சராமரியாக வெட்டிப் படுகொலை செய்து விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக தெரியவருகிறது.

மனைவியின் கண் முன்னால் கணவனை அக்கும்பல் வெட்டிப் படுகொலை செய்துள்ளது. மனைவியின் அலறல் சத்தம் கேட்டு அங்கு ஓடி வந்த அயல்வீட்டுக்காரர்கள் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

வட்டிக்குப் பணம் கொடுப்பதில் ஏற்பட்ட முரண்பாடே இந்தக் கொலைக்குக் காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

## செஞ்சோலை படுகொலை...

யாழ்ப்பாணம் – வல்வெட்டித்துறையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது எம்.கே. சிவாஜிலிங்கத்தால் உயிரிழந்த மாணவிகளுக்கு சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

## யாழ். பல்கலையிலும்...

முல்லைத்தீவு வள்ளிபுனம் செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் 2006 ஆம் ஆண்டு இலங்கை வான்படையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த பாடசாலை மாணவர்களின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகத்தில் இன்று மதியம் 12 மணியளவில் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் மேற்கொள்ளப்பட்ட இந்நினைவேந்தலில் படுகொலை செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களின் திருவுருவப் படத்துக்கு ஈகைச்சுடர் ஏற்றி, மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

விரிவுரையாளர்கள், ஊழியர்கள், மாணவர்கள் எனப் பலரும் நினைவேந்தலில் கலந்துகொண்டனர்.

செஞ்சோலைக் குண்டுத் தாக்குதலின் போது 16 முதல் 18 அகவை வரையான 53 பாடசாலை மாணவர்களும் 4 பணியாளர்களும் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பம்பலப்பிட்டியில்...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து சமிக்ஞைகளை மீறி பயணித்த இந்த பஸ் தும்முல்ல சந்திப் பக்கத்திலிருந்து வந்த லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

விபத்தின் போது பஸ் முற்றாகக் கவிழ்ந்து சேதமடைந்ததாகவும் லொறியின் முன் பக்கம் சேதமடைந்ததாகவும் தெரிகிறது.

இந்த விபத்தில் பெண்கள் இருவர் மற்றும் ஆண்கள் ஐவர் காயமடைந்து கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## இராணுவ முகாமை...

எனக் கோரி பிரதேச மக்களால் இன்று காலை இராணுவ முகாமுக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது..

அந்தப் பகுதியில் இடம்பெறும் மண் கடத்தல், கஞ்சா கடத்தல் உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த இராணுவத்தினரின் உதவி தேவை, பொலிஸார் மீது நம்பிக்கை இல்லை என போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்ட கற்கோவளம் பகுதியில் அமைந்துள்ள 4 ஆவது சிங்க றெஜிமென்ட படையணி இராணுவ முகாமை அகற்ற வேண்டாம் எனட கோரியே இந்த கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

தற்போது இருக்கின்ற இராணுவ முகாம் அகற்றப்பட்டாலும் இதே பகுதியில் இருக்கும் அரச காணி ஒன்றில் இராணுவ முகாமை அமைத்து இந்த பகுதியில் இடம்பெறும் சட்டவிரேத செயற்பாடுகளை கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தவறாக...

நேற்றுக் காலை தலையில் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்களுக்கு ஏற்பட்ட குழப்பத்தினால் தவறாக இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக நீர்கொழும்பு பொலிஸ் அத்தியட்சகர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

நீர்கொழும்புக்கு வடக்கே பிட்டிப்பன பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய தனுஷ்க அஞ்சன என்பவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த இளைஞன் விரைவில் திருமணம் செய்ய இருந்தவர் எனவும் கூறப்படுகிறது.

பிட்டிப்பன லெல்லம என்ற இடத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த போது அங்கு மோட்டார் சைக்கிளில் வந்த இருவரில் ஒருவர் இந்த இளைஞனின் தலையில் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்.

பிட்டிப்பன லெல்லம மீன் சந்தைக்கு அருகில் அதிக எண்ணிக்கையான மக்கள் நடமாட்டத்துக்கு மத்தியில் கொலையாளிகள் இளைஞனைக் கொன்றுவிட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர்.

சாதாரண காதல் விவகாரத்தின் அடிப்படையில் சந்தேகநபர்கள், தொடர்பில்லாத நபர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த இளைஞரைப் போன்ற மேலும் ஒருவரைக் குறிவைத்தவர்கள் தவறுதலாக இவரைச் சுட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

சிசிடிவி காட்சிகள் மற்றும் கொலையாளிகள் வந்த மோட்டார் சைக்கிளின் இலக்கம் மற்றும் உயிரிழந்த இளைஞருக்கு கிடைத்த தொலைபேசிச் செய்தி இலக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் சந்தேக நபர்களை கைது செய்வது கடினம் அல்ல எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பகிரங்கமாகக் கொலை அறிவித்தல்கள் விடுப்போரைக் கைது செய்வது எப்போது?

## ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் அமைப்பாளர் அகத்தியர் அடிகளார் காட்டம்



தமிழர்களின் தலைகளை களனிக்கு கொண்டு வருவேன் என பகிரங்கமாக கூறும் அளவுக்கு வந்துள்ள அரசியலாளர்களை கைது செய்து நடவடிக்கை எடுப்பது எப்போது?. தமிழரின் வழிபாட்டுத்தலங்கள் தொடர்பாக மிக மோசமான கருத்துக்களை வெளியிடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது எப்போது? இவ்வாறான விடயங்கள் தொடர்பில் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.

இவ்வாறு ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் அமைப்பாளர் அகத்தியர் அடிகளார் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் இன்று (14.08.2023) வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்ள விகாரைகளில் கை வைப்போரின் தலையை எடுப்பேன் என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா எச்சரித்துள்ளமை தமிழ் தரப்பினரின் கடுமையான கண்டனங்களுக்கு உள்ளாகியுள்ளது.

மேர்வின் சில்வாவின் இந்த உரையானது, இனங்களுக்கு இடையில் பதற்றத்தை தோற்றுவிக்கும் வகையில் அமைந்துள்ள விமர்சனம் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அது குறித்து பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் அமைப்பாளர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

இன்று எம் தாயகமான வடக்கு – கிழக்கின் அனைத்து பிரதேசங்களிலும் மிக வேகமாக தினம் தினம் மரபுரிமை ஆக்கிரமிப்புக்கள் நடைபெற்று வருகின்றன. இதனை எதிர்கொள்ள சரியான பொறிமுறை ஒன்று அனைத்து தமிழ் தரப்புக்களும் இணைந்து மேற்கொள்வது அவசியமானது.

தமிழ் தேசிய செயற்பாட்டாளர்கள் பல்கலைக்கழகம் உள்ளிட்ட உயர் கல்வி மாணவர்கள் மேலும் வீச்சாக போராட்டங்களை மக்கள் சார்ந்தாக ஒழுங்கமைக்க வேண்டும்.

அரசியலாளர்கள் தொடர் அழுத்தத்தை அரசுக்கு வழங்குவதுடன் நாடாளுமன்றை புறக்கணித்தல் உட்பட ஒத்துழையாமை இயக்கத்துக்குத் தயாராக வேண்டும்.

இதில் பல்கலைக்கழக சமூகத்தினது பங்களிப்பு புலமைசார் தளத்தில் அத்தியாவசியமானது.

அதேபோன்றுசட்டரீதியாகபிரச்சினைகளை எதிர்கொள்ள சட்டவாளர்களின் பங்களிப்பு இப்போது போன்று தொடர்ந்து கிடைப்பதுடன் அது அனைத்து பிராந்திய மட்டத்திலும் ஒருங்கிணைத்த நிபுணத்துவத்துடன் இருப்பது மேலும் பலம் சேர்க்கும்.

தமிழ் தேசிய செயற்பாட்டாளர்கள் பல்கலைக்கழகம் உள்ளிட்ட உயர் கல்வி மாணவர்கள் மேலும் வீச்சாக போராட்டங்களை மக்கள் சார்ந்தாக ஒழுங்கமைக்க வேண்டும்.

அரசியலாளர்கள் தொடர் அழுத்தத்தை அரசுக்கு வழங்குவதுடன் நாடாளுமன்றை புறக்கணித்தல் உட்பட ஒத்துழையாமை இயக்கத்துக்குத் தயாராக வேண்டும்.

பன்னாட்டு மற்றும் இந்திய அரசின் கவனத்தை மேலும் ஈர்த்து இந்த பாரிய பௌத்த மேலாண்மையை திணிக்கும் பூர்வீக தமிழர்களின் சிவ வழிபாட்டு இடங்களை மாற்றியமைக்கும் செயற்பாடுகளில் அரசுக்கு அழுத்தம் கொடுக்க அனைத்து தரப்பினரும் ஒட்டுமொத்தமாக எம்முள் இருக்கும் அனைத்து வேறுபாடுகளையும் களைந்து முன்வருவோம்.

அமைப்புசார் நிலையில் இயங்கும் நாம் அனைவரும் எம் அமைப்புகளின் தனித்துவங்களைப் பேணும் அதே நேரம் எம் மக்களின் ஒட்டுமொத்த நலனுக்காக இருப்பை இத்தீவில் நிலை நிறுத்தவதற்காக ஒருங்கிணைந்த கட்டமைப்பாக செயற்பட இந்த தீர்க்கமான தருணத்தில் அழைப்பு விடுகின்றோம்.

அதே நேரம் இந்த பிரச்சினையை இதயசுத்தியோடு அணுகி அரசு தீர்க்க தவறின் இந்த தீவில் இனங்களுக்கிடையே சமாதான சகவாழ்வு தொடர்ந்து கேள்விக் குறியாகி நாட்டின் எதிர்க்காலம் அதலபாதாளத்துக்குச் செல்லும் என்பதைச் சுட்டிகாட்டுகின்றோம்.

தமிழர்களின் தலைகளை களனிக்கு கொண்டு வருவேன் என பகிரங்கமாக கூறும் அளவுக்கு வந்துள்ள அரசியலாளர்களை கைது செய்து நடவடிக்கை எடுப்பதற்கும் தமிழரின் வழிபாட்டுத் தலங்கள் தொடர்பாக மிக மோசமான கருத்துக்களை வெளியிடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் அரசு உடனடியாக முன்வர வேண்டும்.

இவற்றைச் செய்ய தவறின் தமிழர் நாம் தொடர் சாத்வீக போராட்டங்களுக்கும் ஒத்துழையாமை இயக்க முன்னெடுப்புகளுக்கும் தள்ளப்படுவோம் என இந்த சந்தரப்பத்தில் அரசுக்கு ஆழமாக வலியுறுத்துகின்றோம்.– என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஜே.ஆர் வழியில் ரணில்

அரசியலின் தடம் பெரும்பாலும் மாறுவதில்லைப் போலும். சுற்றிச் சுற்றி ஒரே பாதையில் - ஒரே பாணியில் - செல்வதுதான் இலங்கைச் சரித்திரம் போல.

நாட்டில் புரையோடிப் போயிருக்கும் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவ்வப்போது நடவடிக்கைகள் எடுக்கப்படுவதும், அத்தகைய செயல்பாடுகள் ஆரம்பித்ததுமே மறுபுறத்தில் பேரினவாதம் பேயுருக்கொண்டு, எழுச்சி பெற்று, சந்நதமாடி, அந்த முயற்சிகளை சங்காரம் செய்து, நாசமாக்குவதும் இலங்கையில் காலநிலை மாற்றம் போல ஒழுங்காக வந்து போகும் விடயங்கள்தான்.

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் பேரினவாத ஆவேசப் பேச்சு மீண்டும் பேரினவாத பேய் முருங்கையில் ஏறத் தொடங்கி விட்டது என்பதற்கான அறிகுறிதான்.

தீர்வுக்கான நகர்வு என்னும் பேரில், அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் என்ற கோவையைத் தூசு தட்டி எடுத்து, ஜனாதிபதி ரணில் தீர்வு மேசையில் போட, அவர் எதிர்பார்த்தபடி பேரினவாத மேலாண்மைக் களேபரம் சீறத் தொடங்கிவிட்டது.

ஜனாதிபதி தமது அரசைத் தக்க வைப்பதற்கு எத் தரப்புகளில் தங்கி இருக்கிறாரோ, அந்தப் பிரதான தரப்புகளே 13க்கு எதிராகவும் இனவாதப் போக்கிலும் சீறத் தொடங்கிவிட்டன.

அந்த இனவாத எழுச்சிதான் தமது அரசியலுக்கு உகந்த களச் சூழல் என்று கருதி, அதற்காக அரசியல் காய்களை நகர்த்தும் ரணிலைப் பொறுத்தவரையில் இது எதிர்பார்க்கப்பட்டதே. அதுவல்ல விடயம். அதையும் தாண்டி ரணிலின் இன்னொரு நகர்வும் நோக்கப்பட வேண்டும்.

உருவாகி வரும் அல்லது தாமே முன்னின்று உருவாக்கி வரும் அரசியல் சூழலில், தேவைப்படும் சமயத்தில் தமது ஆயுதப்படையை ஏவி, அடக்குமுறையையும் கையாள வேண்டும் என்பதும் ரணிலின் திட்டம். அதற்கு உகந்த சூழலையும் அவர் தயார் பண்ணுகிறார்.

அரசைக் கவிழ்க்கச் சதி, அதை ஜே.வி.பி. முன்னெடுக்கின்றது, புலனாய்வுத் தகவல்கள் அப்படிக் கூறுகின்றன என்றெல்லாம் அவர் இப்போது கயிறு - கதை - விடுவது அதற்குத்தான்.

இது ஒன்றும் புதிய தந்திரம் அல்ல. அவரது அரசியல் குரு - மாமனார் - மூத்த கிழட்டு நரியான ஜே.ஆர்.ஜெயவர்த்தன செய்ததுதான்.

வரலாற்றில் முன்னெபோதும் இல்லாதவாறு 1983இல் தமிழர்களுக்கு எதிராக மிக மோசமான ஆடிக் கலவரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. தமிழினத்தைச் சிங்களப் பேரினவாதம் இரத்த ஆற்றுக்குள் மூழ்கடித்த கறுப்பு ஜூலை அது.

அதைத் தூண்டி, முன்னெடுத்து, நடத்திய சூத்திரதாரிகள் யார் என்பது உலகறிந்த இரகசியம். ஆனால் ஆடிக் கலவரம் அடங்கிய போது, அதற்கான குற்றச்சாட்டை முழுமையாக ஜே.வி.பி. மீது பகிரங்கமாகச் சுமத்தி, அந்தக் கட்சியை அதற்காகத் தடை செய்து, ஒரு புறம் தமிழரை வேட்டையாடிய சிங்கள பேரினவாத ஆட்சிபீடம், மறுபுறம் ஜே.வி.பியினரை வேட்டையாடியது.

நாற்பது ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் அதையே செய்ய தயாராகிறார் ஜே.ஆரின் மருமகன் ரணிலாரும் போல.

## 10 ஒவ்வாமை மரணங்கள் கடந்த மூன்று மாதங்களில்

### இயல்பானதா என்கிறார் வைத்தியர்களின் தொழிற்சங்க கூட்டமைப்புத் தலைவர்



கடந்த மூன்று மாதங்களில் சுமார் 10 ஒவ்வாமை மரணங்கள் ஏற்பட்டுள்ளன. இது இயல்பானதா என்பதை சுகாதார அமைச்சு தெளிவுபடுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான வைத்தியர்களின் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் சமல் சஞ்சீவ இந்த விடயத்தை கேட்டுக்கொண்டுள்ளார்.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன ஆகியோரின் ஆலோசனையின் பேரில் மருந்துப் பாவனையால் நோயாளிகள் உயிரிழந்தமை தொடர்பில் ஆராயக் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

குழு நியமித்து 48 மணித்தியாலங்களின் பின்னர் கம்பஹா வைத்தியசாலையில் மற்றுமொரு நோயாளி மரணம் பதிவாகியுள்ளது என்று வைத்தியர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

அது ஒரு போதும் சாதாரண நிலைமை அல்ல எனவும் சுகாதார அமைச்சின் உண்மையான பிரச்சினையை மூடி மறைப்பதற்காக வெளியிடும் ஊடக அறிக்கை ஊடாக அமைச்சு மக்களை ஏமாற்றி வருகிறது என்றும் அவர் மேலும் தெரிலித்துள்ளார்.

## இந்த ஆண்டு இறுதிக்குள் வட்டி வீதங்கள் குறையும்

### சாகல ரத்நாயக்க தெரிவிப்பு



இலங்கையில் இந்த ஆண்டின் இறுதிக்குள் வங்கி வட்டி வீதங்களை ஒற்றை இலக்கத்துக்குக் கொண்டு வர முடியும் என்று ஜனாதிபதியின் பணிக்குழாம் மட்ட பிரதானி சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதனால் சிறு மற்றும் நடுத்தர உரிமையாளர்கள் மீண்டும் வலுப்பெறுவார்கள் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் சிறிகொத்த கட்சித் தலைமையகத்தில் நேற்று (13) இடம்பெற்ற அதிகார சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியின் போது, வங்கி வட்டி விகிதங்கள் 34 சதவீதமாக இருந்ததாகவும், ஆனால் இன்று அவை 16 முதல் 17 சதவீதமாக உள்ளதாகவும் மத்திய வங்கி அறிவித்துள்ளது என்று சாகல ரத்நாயக்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# கங்குவேலி ஆதிசிவன் ஆலயத்தில் ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம்!

## அகத்தியமா முனிவர் தீர்த்தமாடிய மகாவலி கங்கையில் தீர்த்தம்!!

அகத்திய மாமுனிவர் வாழ்ந்த வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருகோணமலை மூதூர் கங்குவேலி திருக்கரசையம்பதி ஆதிசிவன் தேவஸ்தானத்தின் வருடாந்த ஆடி அமாவாசை தீர்த்த உற்சவம் 16 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

ஆடி அமாவாசை தீர்த்தோற்சவத்தின் தத்துவத்தை உணர்த்துகின்ற நிகழ்வான எள்ளுநீர் இறைத்து பிதிர்க்கடன் நிறைவேற்றுவதற்கு சிறப்பு வாய்ந்த இடமாக கருதப்படுகின்ற அகஸ்திய மாமுனிவர் தீர்த்தமாடிய புனித மகாவலி கங்கை கரையில் (வவுணாவில்) தீர்த்தமாட விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாளை 15 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஆதிசிவன் ஆலயத்தில் இருந்து சிவபிரான் மகாவலி கங்கையை அடைவார்கள்.





அன்று இரவு மகாவலி கங்கைக் கரையில் அகத்தியர் ஸ்தாபன வரலாறு கூறும் திருக்கரசைப்புராணம் படித்து பயன் சொல்லும் நிகழ்வும் ஆன்மீக சொற்பொழிவும் இடம்பெறும்.

மறுநாள் 16ஆம் திகதி புதன்கிழமை காலை புனித தீமிதிப்பு வைபவமும் சுன்னம் இடித்து ஆடி அமாவாசை தீர்த்த உற்சவமும் இடம் பெறும். தொடர்ந்து அன்னதானம் இடம்பெறும் .

சகல கிரியைகளும் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஜெயகிருஸ்ண சதீஷ் சர்மா தலைமையிலான சிவாச்சாரியார்களுடன் நடைபெற சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன என்று ஆலய பரிபாலன சபை தலைவர் ஓய்வுநிலைஅதிபர் வேலுப்பிள்ளை தவராசா தெரிவித்தார்.

### வரலாறு

திருகோணமலை மாவட்டத்தின் கிளிவெட்டி பிரதேசத்திலுள்ள கங்குவேலி எனும் குக்கிராமத்தில் அகத்தியர் ஸ்தாபனம் என்ற அமைப்பு உள்ளது. அவ் அமைப்பு அகத்தியர் ஆலயத்தை அமைத்து, அருகில் அகத்தியர் வழிபட்ட ஆதிசிவனுக்கு ஆலயத்தை பல சவால்களுக்கு மத்தியில் அமைத்து வழிபட்டு வருகின்றார்கள்.

தாபனத்தின் தலைவர் ஓய்வுநிலை அதிபர் வேலுப்பிள்ளை தவராசா, அங்கு இருக்கும் அகத்தியர் வழிபட்ட சிவலிங்கம் கல்வெட்டுக்கள் மற்றும் மருத்துவ பல்கலைக்கழகம் தடயங்கள் அனைத்தையும் பழைமை குன்றாத வகையில் பேணி வருகின்றார்.

தொடர்ந்து அங்கிருந்து ஐந்து கிலோ மீற்றர் சென்றால் காட்டுக்குள்ளே அகத்தியர் ஆடி அமாவாசை தீர்த்தமாடிய மகாவலி கங்கை நதி தீர்த்தம் உள்ளது. அங்கு சிவன் ஆலய பீடம் ஒன்று இருக்கிறது .

இங்கு ஆடி அமாவாசை காலத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஒன்று கூடி விரதம் அனுஷ்டித்து தீர்த்தம் ஆடுவது வழமையாகும். தந்தையரை இழந்த அனைவரும் அன்றைய தினம் பிதிர் கடன் செலுத்தி தீர்த்தமாடி வாழ்வில் உய்வோமாக.

விபுலமாமணி
வி.ரி.சகாதேவராஜா,
காரைதீவு.

# இரத்தினக்கல், ஆபரண தொழில் சார் வருமானத்தை எட்ட நடவடிக்கை எடுங்கள்

## அதிகாரிகளைப் பணித்தார் ஜனாதிபதி




இரத்தினக்கல் மற்றும் ஆபரண தொழில் சார் ஏற்றுமதி மற்றும் மீள் ஏற்றுமதியை மேம்படுத்துவதன் மூலம் வருடாந்தம் அதிக ஏற்றுமதி வருமானத்தை ஈட்ட முடியும். அந்த இலக்கை அடைவதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் மற்றும் திட்டங்களை உடனடியாக சமர்ப்பியுங்கள்.

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழில் துறை தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் அபிவிருத்திக்கான வரிக் கொள்கைகள் தொடர்பான பரிந்துரைகள் சூழல், இயற்கை வளங்கள் மற்றும் நிலையான அபிவிருத்திக்கான துறை சார் கண்காணிப்புக் குழுவால் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையை பாதிக்கும் வரிகள் மற்றும் ஏற்றுமதி, மீள் ஏற்றுமதி செயன்முறைகள் தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது. அத்துடன் இத் துறையில் இதுவரை ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் உரிய தரப்பினர் ஜனாதிபதியிடம் தகவல்களை முன்வைத்தனர்.

இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் வருமானம் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இவ்வருடம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடையவில்லை என்று இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

வருடாந்தம் குறைந்தது இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர்களை இலக்காகக் கொள்ள திட்டமிடப்பட்ட வேலைத்திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட வேண்டும் என்று இதன்போது ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இலங்கையில் இரத்தினக்கல் மற்றும் ஆபரண தொழிலை மேம்படுத்துவதற்கான முறையான வேலைத்திட்டம் உடனடியாக முன்வைக்கப்பட்டால் தேவையான வசதிகளை வழங்க அரசு தயாராக உள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதன்போது மேலும் குறிப்பிட்டார்.

# இனவாதக் கண்ணாடிகளைக் கழற்றி வீசிவிட்டு வஞ்சிக்கப்பட்ட சமூக அவலத்தைக் கேளுங்கள்

## கிழக்கின் கேடயம் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர் )

கல்குடா முஸ்லிம் பிரதேசத்தில் வாழும் வாழைச்சேனை, ஓட்டமாவடி, மீராவோடை பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்வதற்கு இடமில்லாமல் ஓட்டமாவடியிலிருந்து வாழச்சேனை மத்திக்கு வழங்கப்பட்ட தியாவட்டவான் கிராம சேவகர் பிரிவிலுள்ள வெற்றுக் காணிகளில் குடியேறச் சென்றனர். மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், காணித்திருட்டில் முஸ்லிம் சமூகம் ஈடுபட்டுள்ளனர் என்று அறிக்கை விட்டிருப்பது விழித்துக் கொண்டிருந்தவனின் கண்ணில் தூங்கியன் குத்தியது போன்றுள்ளது.

ஓநாய்களின் பரிதாப அலறல் ஆட்டுக் குட்டிகளின் இரத்தத்தை நோக்கித்தான் என்பதை பல வருடங்களாக நாங்கள் எல்லா இடத்திலும் ஆழமாக வலியுறுத்தி வருகின்றோம்.

இவ்வாறு கிழக்கின் கேடயம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கின் கேடயம் சார்பில் பிரதான ஒருங்கிணைப்பாளர் எஸ்.எம். சபீஸ் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

மட்டக்களப்பு மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பு 2,876 சதுர கிலோ மீற்றர். இதில் 27 வீதம் வாழும் முஸ்லிம் சமூகத்துக்கு 786 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்புத் தேவையாகயுள்ள நிலையில், இன்று காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை, மீராவோடை, அடங்களாக முஸ்லிம் சமூகம் வாழும் மொத்த நிலப்பரப்பு 1.04 வீதத்துக்கும் குறைவானதாகும்.

1999 ஆம் ஆண்டு அரசால் உருவாக்கப்பட்ட பனம்பலன ஆணைக்குழு நாட்டின் பல பகுதிகளில் எல்லை நிர்ணயங்களை மேற்கொண்டு நடைமுறைப்படுத்தியுள்ளதுடன், வாழைச்சேனை மத்தி, கிராண் பிரதேச செயலகங்களை தற்காலிக இணைப்பாக வர்த்தமானி வெளியிடப்படாமல் இன்றுவரை வைத்துள்ளது என்பதையும் இதற்கான முழுக்காரணம் புலிகளின் கெடுபிடிகளும் மட்டக்களப்பு மாவட்ட நிர்வாகத்தின் செயற்பாடுகளும் என்பதை நாடறியும்.

13 ஆவது திருத்தச்சட்டத்தை மாகாணங்களுக்கிடையில் நடைமுறைப்படுத்தும் போது காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை குறிப்பாக, வட, கிழக்கு மாகாணங்களுக்கு வழங்கக் கூடாது என்பதே பெரும்பாலான முஸ்லிம்களின் நிலைப்பாடாகும். அதற்கு இது போன்ற செயல்களே மூல காரணமாக அமைந்துள்ளது.

1999 ஆம் ஆண்டு அரசால் நியமனம் செய்யப்பட்ட பனம்பலன ஆணைக்குழு கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலகத்துக்குட்பட்ட வடமுனை, ஊத்துச்சேனை, கள்ளிச்சை, புனானை, வாகனேரி ஆகிய ஐந்து கிராம சேவகர் பிரிவுகளையும் தற்காலிகமாக கிராணுடன் இணைத்தமையையும், வாழைச்சேனை மத்தியுடன் தியாவட்டவான் கிராம சேவகர் பிரிவை தற்காலிகமாக இணைத்ததன் காரணமாக ஓட்டமாவடி சமூகம் ஏறத்தாழ 176 சதுர கிலோ மீற்றர் நிலத்தை முழுமையாக இழந்ததையும் சாணக்கியன் போன்றோர்கள் அறிவார்களா?

வாழைச்சேனை மத்திக்கு ஆணைக் குழுவால் வாகரைப்பிரதேசத்திலிருந்து முன்மொழியப்பட்ட 240 சதுர கிலோ மீற்றர் நிலத்தையும் முஸ்லிம் சமூகததுக்கு வழங்குவதற்கு மட்டக்களப்பு மாவட்ட கச்சேரி மறுத்து விட்ட நிலையில், ஓட்டமாவடியிலிருந்து பெற்றுக் கொண்ட ஒரேயொரு கிராம சேவகர் பிரிவான தியாவட்டவானையும் வாழைச்சேனைப்பற்றில் இருந்த ஒரு சில முஸ்லிம் கிராம சேவகர் பிரிவுகளை மாத்திரம் வைத்தே இன்று வரை வாழைச்சேனை மத்தி பிரதேச செயலகம் தற்காலிக நிர்வாகம் செய்கிறது.

இன்று கல்குடா முஸ்லிம் பிரதேசத்தில் வாழும் வாழைச்சேனை, ஓட்டமாவடி, மீராவோடை பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்வதற்கு இடமில்லாமல் ஓட்டமாவடியிலிருந்து வாழச்சேனை மத்திக்கு வழங்கப்பட்ட தியாவட்டவான் கிராம சேவகர் பிரிவிலுள்ள வெற்றுக் காணிகளில் குடியேறச் சென்றவர்களையே மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் முஸ்லிங்களின் பூர்வீகக் காணிகளை அபகரிப்பதை மறைத்து, காணித்திருட்டில் முஸ்லிம் சமூகம் ஈடுபட்டுள்ளதாக அறிக்கை விட்டிருப்பது விழித்துக்கொண்டிருந்தவனின் கண்ணில் தூங்கியன் குத்தியது போன்றுள்ளது.

இப்படியான இனவாத நடவடிக்கைகளும், இனவாத அறிக்கைகளும் ஏற்றுக்கொள்ள முடியாது. இவற்றை வன்மையாகக் கண்டிக்கிறோம்.– என்று தெரிவித்துள்ளார்.






# டெங்கு தடுப்பு நடவடிக்கை

# வடக்கில் இன்று ஆரம்பம்

## அனைத்துத் தரப்பினரையும் அழைக்கிறார் சுகாதார சேவைகள் பணிப்பாளர்



வடக்கு மாகாணத்தின் சகல இடங்களிலும் இன்று (14) முதல் 7 நாள்களுக்கு டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இது தனியே சுகாதாரத் திணைக்களத்துக்கான வேலை மாத்திரமல்ல, தனியே நகர சபைகள், பிரதேச சபைகளுக்கான வேலைகள் மாத்திரமல்ல. அனைத்து தரப்பினரும் இந்த டெங்கு நோய் பரவும் அபாயத்தை இல்லாது ஒழிக்க ஒத்துழைக்க வேண்டும்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.சத்திய மூர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

எமது பகுதிகளில் டெங்கின் தாக்கம் குறைவாக காணப்பட்டாலும் எதிர்வரும் ஒரிரு மாதங்களில் மழை வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே டெங்கின் தாக்கம் அதிகரிக்க கூடும் என்று எச்சரிக்கப்பட்டு இருக்கிறது.

ஏற்கனவே ஜனாதிபதி இலங்கை பூராகவும் டெங்கு கட்டுப்பாட்டுக்காக விசேட குழுக்களை அமைத்து செயற்படும்படி கேட்டிருக்கின்றார். அதன் பிரகாரம் மாகாண மட்ட குழுக்கள், மாவட்ட மட்ட குழுக்கள் மற்றும் பிரதேச கிராமமட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தக் குழுக்கள் குறிப்பாக பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என கூறப்பட்டிருக்கிறது. ஆகவே வடமாகாணத்திலும் இதற்கான கலந்துரையாடல்கள் நடைபெற்றது.

அதாவது டெங்கு விழிப்புணர்வு மற்றும் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகளை செயற்படுத்தப்படும்படி குறிப்பிடமப்பட்டுள்ளது. இந்த மாகாணத்தில் உள்ள சகல இடங்களிலும் இந்த விடயங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அதன் பிரகாரம் நாங்கள் டெங்கு வாரத்தை அறிவித்திருக்கின்றோம். அதாவது இன்று தொடக்கம் 7 நாள்களுக்கு டெங்கு தடுப்பு நடவடிக்கைகளில் சகலரும் ஈடுபட வேண்டும்.

குறிப்பாக இந்த வருடம் இலங்கை முழுவதும் ஐந்தரை மாதங்களில் 45,612 பேருக்கு டெங்கு நோய் ஏற்பட்டிருக்கிறது, இதில் யாழ். மாவட்டத்தில் 1472 பேருக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 62 பேருக்கும், மன்னார் மாவட்டத்தில் 76 பேருக்கும், வவுனியா மாவட்டத்தில் 103 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 100 பேருக்கும் டெங்கு இருப்பதாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது.

யாழ் மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையானோர் டெங்கு நோய்க்கு உள்ளாகி இருக்கின்றார்கள், குறிப்பாக யாழ். மாவட்டத்தில் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, நல்லூர் மற்றும் நகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் அதிகளவானோர் டெங்கு நோய்க்கு ஆளாகியுள்ளனர்.

வடமாகாணத்தில் இருக்கும் சகல பகுதிகளிலும் டெங்கு நோய் தொற்றும் அபாயம் காணப்படுகிறது, பருவப் பெயர்ச்சி மழையில் டெங்கு நோய் பரப்பும் நுளம்புகள் பெருகும் வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றன. ஆகவே சகல தரப்பினரும் டெங்கு நோயை இல்லாது ஒழிப்பதற்கு முற்காப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

குறிப்பாக அந்தந்த பிரதேசங்களில் இருக்கும் பாடசாலை வளாகமாக இருக்கலாம், அரச சேவை நிலையமாக இருக்கலாம், அல்லது தனியார் நிலையமாக இருக்கலாம், அதாவது டெங்கு அபாயத்தை விளைவிக்கக் கூடிய நீர் தேங்கி நிற்கக் கூடிய பொருள்கள் கிரமமாக அகற்றப்பட்டு அந்தந்த பிரிவின் உள்ளூராட்சி திணைக்களத்தின் கீழ் இயங்கும் பிரதேச சபைகளின் ஊடாக அகற்றப்பட்டால் டெங்கு நோயை எமது பகுதிகளில் கட்டுப்படுத்த முடியும்.

மாகாண மட்டத்தில் அல்லது மாவட்ட மட்டத்தில் இருக்கும் சுகாதார வைத்திய அதிகாரிகள், சுகாதார பரிசோதகர்கள் இந்த விடயங்களை அவர்கள் வினைத்திறனோடு இந்த கடமைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துவார்கள்.

ஆகவே அவர்கள் பகுதிகளுக்கு வரும்போது அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் அனைவரும் பொறுப்போடு செயற்பட வேண்டும்.

இது தனியே சுகாதாரத் திணைக்களத்துக்கான வேலை மாத்திரமல்ல, தனியே நகர சபைகள், பிரதேச சபைகளுக்கான வேலைகள் மாத்திரமல்ல அனைத்து தரப்பினரும் இந்த டெங்கு நோய் பரவும் அபாயத்தை இல்லாது ஒழிக்க ஒத்துழைக்க வேண்டும்.– என்று தெரிவித்துள்ளார்.



# நீட் தேர்வு தோல்வியால் மாணவன் தற்கொலை: சோகத்தில் உயிரை மாய்த்துக் கொண்ட தந்தை!





தமிழகம் சென்னையில் நீட் தேர்வு தோல்வி காரணமாக கடந்த சனிக்கிழமை தற்கொலை செய்து கொண்ட மாணவர் ஜெகதீஸ்வரனின் தந்தை செல்வசேகர் இன்று அதிகாலை தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

சென்னை – குரோம்பேட்டை பகுதியில் வசித்து வந்தவர் செல்வசேகர். இவரது 19 வயதான மகன் ஜெகதீஸ்வரன் இரண்டு முறை நீட் தேர்வு எழுதி தோல்வி அடைந்துள்ளார். அதனால் ஏற்பட்ட விரக்தி காரணமாக நேற்று முன்தினம் தற்கொலை செய்து கொண்டார்.

இந்த நிலையில், மகன் உயிரிழந்த சோகத்தை தாங்க முடியாமல் இன்று அதிகாலை தந்தை தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். அவரின் உடலை மீட்டு சிட்லப்பாக்கம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 2021 ஆம் ஆண்டு பன்னிரண்டாம் வகுப்பை முடித்த ஜெகதீஸ்வரன், மருத்துவராகும் கனவுடன் நீட் தேர்வுக்காக தயாராகி வந்துள்ளார். இதற்காக பயிற்சி மையத்தில் இணைந்து பயிற்சியும் பெற்றுள்ளார். இருந்தும் இரண்டு முறை தேர்வு எழுதி தோல்வியை தழுவிய காரணத்தால் தற்கொலை செய்து கொண்டார். இந்த சூழலில் நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என செல்வசேகர் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மகன் ஜெகதீஸ்வரனின் இறுதிச் சடங்கு இடம்பெற்ற நிலையில், நள்ளிரவு வரை செல்வசேகருடன் உறவினர்கள் இருந்துள்ளனர்.

எனினும் இன்று அதிகாலை அவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். இந்தச் சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# எந்தச் சூழலிலும் உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டாம்!

## - மாணவர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் அறிவுரை



நீட் தேர்வு தோல்வியால் சென்னை குரோம்பேட்டையைச் சேர்ந்த மாணவர் தற்கொலை செய்து கொண்ட நிலையில் அவரது தந்தையும் துக்கம் தாளாமல் தற்கொலை செய்து கொண்டார். இந்தச் சூழலில் மாணவர்கள் உயிரை மாய்த்துக் கொள்ளும் சிந்தனைக்குள் செல்ல வேண்டாம் எனவும் தன்னம்பிக்கையுடன் எதையும் எதிர்கொள்ள வேண்டும் என்றும் முதல்வர் ஸ்டாலின் அறிவுரை வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக இன்று காலை அவர் வெளியிட்ட அறிக்கையில் இதனை குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நீட் தேர்வு மையத்தில் பயின்றுவந்த குரோம்பேட்டையைச் சேர்ந்த மாணவர் ஜெகதீஸ்வரன் தற்கொலை செய்து கொண்டு உயிரை மாய்த்துள்ளதை அறிந்து அதிர்ச்சி அடைந்தேன். அவரது குடும்பத்துக்கு எப்படி ஆறுதல் சொல்வது என்று நினைத்துக் கொண்டிருந்த நிலையில், ஜெகதீஸ்வரனின் தந்தை செல்வசேகரும் மறுநாளில் தற்கொலை செய்து கொண்டுள்ளார். ஜெகதீஸ்வரன் குடும்பத்துக்கும், உறவினர்க்கும், நண்பர்களுக்கும் என்ன சொல்லி ஆறுதல் கூறுவது எனத் தெரியவில்லை.

நன்றாகப் படிக்கும் மகன், மருத்துவர் ஆவான் என்று தான் அவரைப் பெற்ற பெற்றோர் நினைத்திருப்பார்கள். ஆனால் நீட் தேர்வு எனும் பலிபீடத்தில் பலியானவர்கள் பட்டியலில் ஜெகதீஸ்வரன் சேர்ந்துவிட்டது மிகக் கொடூரமான நிகழ்வாகும்.

எந்தச் சூழலிலும் உயிரை மாய்த்துக் கொள்ளும் முடிவை எந்த மாணவரும், எப்போதும் எடுக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். உங்கள் உயர்வுக்குத் தடைக்கல்லாக இருக்கும் நீட் தேர்வு முறையை நிச்சயம் நீக்க முடியும். அதற்கான சட்ட ரீதியான முயற்சியில்தான் தமிழ்நாடு அரசு தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது.

மாணவன் ஜெகதீஸ்வரன், அவரது தந்தை செல்வசேகர் ஆகிய இருவரது மறைவுக்கும் எனது ஆழமான அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவர்களது மரணமே, நீட் பலிபீடத்தின் இறுதி மரணமாக இருக்கட்டும்.

அறிவுமிகு மாணவக் கண்மணிகளே, உங்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் காத்திருக்கிறது. தன்னம்பிக்கை கொள்ளுங்கள். வாழ்ந்து காட்டுங்கள். பிறரையும் வாழ வையுங்கள். உயிரை மாய்த்துக் கொள்ளும் சிந்தனை வேண்டாம் என்று உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

# சட்டமன்றப் பேரவையில் அநாகரிக செயல்!



1989 ஆண்டு அன்று தமிழக சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற நாகரிகமற்ற செயலை நாடகம் என்று சொல்வது முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பதற்கு சமம் என ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

இது குறித்து இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழக சட்டமன்றப் பேரவையில் ஜெயலலிதா அவமதிக்கப்பட்டதை 'நாடகம்' என்று சொல்லும் தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலினுக்கு கடும் கண்டனத்தை தெரிவிக்கின்றேன்.

இது உண்மையிலே நடைபெற்ற சம்பவம். ஆனால், இந்தச் சம்பவம் நாடகம் என்று தி.மு.க. உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் கூறினர். இது குறித்து ஒரு நாளிதழுக்கு பேட்டியளித்த தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின், இதுபோன்ற நிகழ்வு தமிழக சட்டமன்றப் பேரவையில் நிகழவில்லை என்றும், அன்று சட்டமன்றத்தில் இருந்தவர்களுக்கு இது ஒரு நாடகம் என்பது தெரியும் என்றும் பேட்டியளித்து இருக்கிறார். நடந்த சம்பவத்தை, நடந்த உண்மையை திரித்துப் பேசுவது கடும் கண்டனத்திற்குரியது என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஏவுகணை உற்பத்தியை அதிகரிக்குமாறு வடகொரிய ஜனாதிபதி அதிரடி உத்தரவு!





இராணுவ சக்தியை பலப்படுத்தவும் போருக்குத் தயாராக இருப்பதற்கும் ஏவுகணை உற்பத்தியை அதிகரிக்குமாறு வட கொரிய ஜனாதிபதி கிம் ஜொங் உன் உத்தரவிட்டுள்ளார்.

தென் கொரியாவும் அமெரிக்காவும் வருடாந்த இராணுவப் பயிற்சிகளுக்குத் தயாராகி வரும் நிலையில், வட கொரிய அரச ஊடகமொன்று இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமை களில் தந்திரோபாய ஏவுகணைகள், ஏவுகணை ஏவுதளங்கள், கவச வாகனங்கள் மற்றும் பீரங்கி குண்டுகளை உற்பத்தி செய்யும் முக்கிய ஆயுத தொழிற்சாலைகளை பார்வையிட்ட கொரிய ஜனாதிபதி கிம் ஜொங் உன் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

தென்கொரியாமற்றும்அமெரிக்காவின் இந்த இராணுவப் பயிற்சியை வடகொரியா ஒரு யுத்தத்திற்கான ஒத்திகையாக பார்க்கும் நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் விரிவாக்கப்பட்ட மற்றும் பலப்படுத்தப்பட்ட



முன்னணி இராணுவப் பிரிவுகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, ஏவு கணை உற்பத்தியை வினைத்திறனான முறை யில், அதிகரிப்பது முக்கிய இலக்காகும் என கிம் ஜொங் உன் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பாரியளவிலான பல ஏவுகணைகள் உள்ளிட்ட அவசரத் தேவை இருப்பதாகவும் அவர் கூறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யுக்ரைனுடனான போருக்கு வடகொரியா ஆயுதங்களை ரஷ்யாவுக்கு வழங்கவுள்ளதாக அமெ ரிக்கா குற்றம் சாட்டுகிறது.

ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ஷே ாய்கு கடந்த மாதம் பியோங்யாங்கிற்கு விஜயம் செய்த போது வட கொரிய அதிகாரிகளுடன் உக்ரைனில் அதன் போருக்காக மொஸ்கோவுக்கு வெடி மருந்துகளை விற்பனை செய்வதை அதிகரிப்பது குறித்து கலந்துரையாடியதாக அமெரிக்க உளவுத் துறை அதிகாரிகள் அறிவித்ததாக வெள்ளை மாளிகை தெரி வித்துள்ளது.

# ஈரானில் பள்ளிவாசல் மீது பயங்கரவாதத் தாக்குதல்!

ஈரானின் மத்திய நகரமான ஷிரா ஸில் உள்ள ஷியா முஸ்லிம்களின் வழிபாட்டுத்தலத்தின் மீது பயங்கரவாத தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற இந்த தாக்குத லில் குறைந்தது நான்கு பேர் கொல்லப் பட்டுள்ளனர் என அதிகாரிகள் கூறியுள் ளனர்.

இருப்பினும் நேற்றைய தினம் இந்த தாக்குதலுக்கு எந்தவொரு குழுவும் இதுவரை பொறுப்பேற்கவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

பார்ஸ் மாகாணத்தில் அமைந்துள்ள மற்றும் ஷியா முஸ்லிம்களின் மிக முக்கியமான ஒன்றாக பார்க்கப்படும் இந்த வழிபாட்டுத்தலம் மீது கடந்த ஆண்டு ஒக்டோபர் 26 அன்றும் தாக்குதல் நடத்தப்பட்டது.

கடந்த ஒக்டோபர் மாதம் 15 பேரை பலிகொண்ட இதே ஆலயத்தின் மீதான



தாக்குதலுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றுக்கொண்டது.

ஈரானின் நாடாளுமன்றம் மற்றும் அயதுல்லா ருஹோல்லா கொமேனி யின் கல்லறையை குறிவைத்து 2017 இல் நடந்த இரட்டை குண்டுவெடிப்பு உட்பட ஈரானில் முந்தைய தாக்குதல் களுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பொறுப் பேற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# நைஜரின் ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு!

பதவி நீக்கம் செய்யப்பட்ட நைஜரின் ஜனாதிபதி மொஹமட் பாஸூம் மீது தேசத் துரோக வழக்குத் தொடரவுள்ளது என அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

நைஜரின் இராணுவத் தலைவர் களிடம் இருந்து நாட்டை மீட்பதற்கு உதவுமாறு மேற்கு ஆபிரிக்க தலைவர்களிடம் அந்த நாட்டின் மூத்த இஸ்லாமிய தலைவர்கள் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது,

அத்தோடு, நைஜர் மீது விதிக்கப் பட்டுள்ள கடுமையான பொருளாதாரத் தடைகளை நீக்குமாறும் வலியுறுத் தப்பட்டுள்ளது.


கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அழகில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949